# *14.09.2020 அன்று நடைபெற்ற அவசர கூட்டத்தின் <u>மன்றப்பொருள்</u>*

**<u>மன்றப்பொருள் 857–14/09/2020</u>**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு, மன்னார்கோவில், திருமலையப்பபுரம், ஆசிர்வாதபுரம் மற்றும் தென்காசி வாய்க்கால்பாலம் ஆகிய 5 இடங்களில் உள்ள நீரூந்து நிலையங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 5 இடங்களில் உள்ள மின்மோட்டார்களை இயக்கவும், பராமரிக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 13 நபர்கள் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.09.2020ல் முடிவடைகிறது. எனவே மேற்படி குடிநீர் பணிக்கு அக்டோபர் 2020 முதல் ஜனவரி 2021 வரை மின்மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ8.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் 858–14/09/2020</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தின் வடபகுதி, தென்பகுதி மற்றும் நடுபகுதியில் அமைந்துள்ள பயணிகள் இருக்கும் இடங்களில் குழல் விளக்குகள் பெரும்பாலனவை ஒளிராமல் உள்ளதால் அப்பகுதி முழுவதும் இரவு நேரங்களில் இருளாக உள்ளது. இதனால் மேற்படி இடங்களில் பேரூந்துக்காக வந்து செல்லும் பொதுமக்களிடம் உள்ள பொருட்கள் திருடு போவதற்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே மேற்படி இடங்களில் புதியதாக 46 எண்ணம் 4' 20வாட் LED குழல் விளக்குகள் வாங்கி பொருத்துவதற்கு உத்தேச செலவு தொகை ரூ14,000/-க்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி 09.09.2020ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் விபரம் | LED குழல் விளக்குகள் மொத்த எண்ணிக்கை | எண்ணம் ஒன்றிற்கு தொகை ரூ. | மொத்தத் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | M/s.Bombay Electric Company,<br>162 சுவாமி சன்னதி, தென்காசி. | 46 | 300/- | 13,800/- |
| 2 | M/s Southa Electricals<br>36A அம்மன் சன்னதி, தென்காசி. | 46 | 320/- | 14,720/- |

அ.கு 1 மேற்படி LED குழல் விளக்குகள் வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ**14,000**யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட தென்காசி M/s Bombay Electric Company என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 859 –14/09/2020**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள உயர்கோபுர மின் விளக்கின் எஃகு கயர் (Steel Rope) மாற்றிய அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண் **851** நாள் 28.08.2020ம் தேதியன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 11.09.2020ம் தேதியன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Muthu Industries,<br>2/2 பாரதியார் தெரு, திருமால்புரம், மதுரை. | ரூ1,04,000/- |
| 2 | M/s Akash Engineering Associates (P) Ltd<br>40/1 உச்சி மாகாளி அம்மன் கோவில் தெரு, தென்காசி. | ரூ1,05,000/- |

அ.கு மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள மதுரை M/s Muthu Industries என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 860 –14/09/2020**

தென்காசி நகராட்சி பொது நிதி 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் **825** நாள் 05.06.2020ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.09.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | களக்கோடி தெருவில் 3 எண்ணம் சிறுபாலம் மற்றும் மலையான் தெருவில் ஒரு சிறுபாலம் கட்டுதல் | 2.80 | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர்<br>திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 0.24% குறைவு<br>0,36% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.24% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருU.முத்துக்குமார் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 861 –14/09/2020**

தென்காசி நகராட்சி பொது நிதி 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் **826** நாள் 05.06.2020 ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.09.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரா்கள் பெயா் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மேல மாசி வீதியில் (வேன் ஸ்டான்ட் அருகில்) சிறுபாலம் அமைத்தல், பாறையடி தெருவில் சிமெண்ட தளம் அமைத்தல் மற்றும் மவுண்ட் ரோட்டில் மழைநீா் வடிகாலினை உயா்த்தி கட்டுதல் | 1.20 | திரு U.முத்துக்குமாா் ஒப்பந்தக்காரா் | 0.19% குறைவு |
| | | | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரா் | 0.23% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.19% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருU.முத்துக்குமாா் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 862 –14/09/2020**

தென்காசி நகராட்சி பொது நிதி 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகா்மன்ற தீா்மானம் எண் 836 நாள் 30.06.2020ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.09.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரா்கள் பெயா் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான மலையான் தெருவில் உள்ள நகா்நல மைத்தின் அருகில் கொரோனா சளி மாதிரி எடுப்பதற்கான ஷெட் அமைத்தல் | 2.00 | திரு K.ராஜாமுகம்மது ஒப்பந்தக்காரா் | 0.07% குறைவு |
| | | | திரு K.நிஸாா் ஒப்பந்தக்காரா் | 0.86% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.ராஜாமுகம்மது ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் 863 –14/09/2020</u>**

தென்காசி நகராட்சி பொது நிதி 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 723 நாள் 06.12.2019ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.09.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 26 கீழப்பாளையம் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் மற்றும் மழைநீர் வடிகால் சரிசெய்தல் | 5.00 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.17% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் 864 –14/09/2020</u>**

தென்காசி நகராட்சிக்கு சாலைகள் சீரமைப்பதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு குழுமம் திட்டம் (IUDM) 2020 – 21ம் ஆண்டு திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க ரூ385.00 இலட்சத்திற்கு (ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு குழுமம் நிதி ரூ308.00 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ77.00 இலட்சம் நகராட்சி பங்களிப்பாகவும், ஆக மொத்தம் ரூ385.00 இலட்சம்), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்: 303 நாள் 09.09.2020ல் நிதி ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை, தலைமை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 1 TNHB காலனி (a to c), சக்தி நகர்(a to c), தாய்பாலா நகர் (a to c)மற்றும் வெல்கம் நகர் (a&b) ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 1) | **195.00** |
| 2 | வார்டு எண்: 2 மங்கம்மாள் சாலை (a&b) மற்றும் வார்டு எண்: 32 மைனாப்பேரி ரோடு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 2) | **190.00** |
| | **மொத்தத் தொகை** | **385.00** |

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

[1040/2020/இ1]

**மன்றப்பொருள் 865 –14/09/2020**

பிரதம மந்திரி ஜன்விகாஸ் கரியகிராம் (PMJVK) மத்திய அரசின் சிறுபான்மையினர் திட்டத்தின் கீழ், ரூ50.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசாணை எண் G.O. (ms) No. 57 நாள் 21.07.2020ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு, திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 1846/2020/ஆ1, நாள்: 05.08.2020ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 28.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு K. ராஜா முகம்மது,
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன் கோவில்
2. திரு K. நிஸார்,
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன் கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், 02.09.2020 அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 32 மைனப்பேரி செல்லும் சாலையில் (கீழப்புலியூர்) நலமையம் அமைத்தல் | 50.00 | திரு K. ராஜாமுகம்மது ஒப்பந்தக்காரர் | 4.91% கூடுதல் |
| | | | திரு K.நிஸார் ஒப்பந்தக்காரர் | 7.68% கூடுதல் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான கூடுதல் விகிதம் கொடுத்துள்ள திரு.K.ராஜாமுகம்மது ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விகிதத்தை விட 4.91% கூடுதலாக இருந்தது. எனவே ஒப்பந்தகாரருக்கு விலைக்குறைப்பு செய்து தருமாறு (Negotiation) இவ்வலுவலக அறிவிப்பு கடித எண். 386/2020/இ1 நாள்.02.09.2020ம் தேதியில் அனுப்பப்பட்டது. அதன்பேரில் விலைக்குறைத்து செய்து தர 04.09.2020ம் தேதியில் ஒப்பந்தகாரரிடம் சம்மத கடிதம் பெறப்பட்டது. அதன் பேரில் திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை விட 4.00% கூடுதல் என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட 4.00% கூடுதலாக கொடுத்துள்ள திரு.K.ராஜாமுகம்மது, ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

(386/2020/இ1)

**மன்றப்பொருள் 866 –14/09/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20 சிந்தாமணியில் உள்ள சிமெண்ட் சாலை சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள சிறுபாலமும் சேதமடைந்து கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி சுகாதா சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்து, சிறுபாலத்தினை சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ80,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்867–14/09/2020**

தென்காசி நகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள **61** நிரந்தரப் பணியாளர்கள் இருந்த நிலையில் **30.06.2020** அன்று **4** துப்புரவு பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற இருக்கிறார்கள். மேலும் இவ்வலுவலக கோப்பு ந.க.எண். **4510/2016/எச்1** நாள். **03.02.2017**ன் படி **116** துப்புரவு பணியார்களும் மற்றும் வாகனங்களும் தின வாடகைக்கு எடுக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. இந்நிலையில் மேற்படி மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றதால், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைவான கொடுத்துள்ள ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு, தற்போது **125** துப்புரவு பணியாளர்களை வெளிப்புற அனுப்புதல் (OUT SOURCE) முறையில் பணியாளர்களை மட்டும் கொண்டு **01.07.2020** முதல் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ந.க.எண். **2047/2019/எச்1** ன் உத்திரவு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சியில் உள்ள ஏழு இலகுரக வாகனங்கள் **01.04.2020** முதல் கொரோனா தடுப்பு பணிகளுக்கு கிருமிநாசினிகள் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டு , கிருமிநாசினிகள் தெளிக்கும் பணிக்கும், இரண்டு லாரிகள் குப்பைகள் எடுக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டும் வருகிறது. இதன் காரணமாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

எனவே ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம், என்ற தனியார் நிறுவனத்திற்கு ஏற்கனவே ந.க.எண்.**4510/2016/எச்1** என்ற உத்திரவின் படி வழங்கப்பட்ட ஒப்பந்த விகிதத்தின் அடிப்படையில் **3** வாகனங்களை மூன்று மாதங்களுக்கு மட்டும் **(01.07.2020** முதல் **30.09.2020)** கூடுதலாக இயக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத் தீர்மான எண்.**833** நாள்.**30.06.2020** ன் படி அனுமதிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டது. பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி, மேலும் மூன்று **(01.10.2020** முதல் **31.12.2020** முடிய ) மாதங்களுக்கு நீட்டிக்கவும்,அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் மூன்று வாகனங்களை மேலும் மூன்று மாதங்களுக்கு **(01.10.2020** முதல் **31.12.2020** முடிய )பணிகள் செய்ய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்ககலாம்.

ந.க.எண்.**4510/2016/எச்1**

**<u>மன்றப்பொருள் 868–14/09/2020</u>**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே மேம்பாலத்தில் 92 எண்ணம் 250வாட்ஸ் MH மின்விளக்குகள் உள்ளன. மேற்படி மின்விளக்குகளுக்கான கேபிள் மிகவும் பழுதடைந்து, அடிக்கடி மின்கசிவு ஏற்பட்டு மின்கேபிள் எரிந்து மேற்கண்ட மின்விளக்குகள் சீரான முறையில் ஒளிராத நிலை ஏற்படுகிறது. மேற்படி பாலமானது நகரின் மிகமுக்கிய இடங்களான அரசு தலைமை மருத்துவமனை மற்றும் புதிய பேரூந்து நிலையம் போன்ற இடங்களுக்கு செல்லவும் மற்றும் மதுரைக்கு செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையின் மிகவும் பிரதானமான இணைப்பு பாலமாகவும் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து தொடர்ந்து 24 மணி நேரமும் நடைபெற்று வருகிறது. இரவு நேரங்களில் பொதுமக்கள் செல்ல மேற்படி பாலத்தில் உள்ள மின்விளக்குகள் ஒளிர்வதில் ஏற்படும் குறைபாட்டினை சரிசெய்ய மேற்கண்ட MH மின்விளக்குகளுக்கான இணைப்பு கேபிள் 3½ core 35 Sqmm UG கேபிள் – 750 மீட்டர், 200 Amps Fuse Unit - 3 Nos மற்றும் 100 Amps Fuse Unit – 12 Nos ஆகியவைகள் புதிதாக அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் 869–14/09/2020</u>**

தென்காசி நகராட்சி பகுதியில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பணிகள் மேற்கொள்ள இருக்கும் பணியாளர்களுக்கு அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் கிருமி நாசினிகள் பொருட்களை வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2000000/–(ரூபாய் இருபது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான பாதுகாப்பு உபகரணங்கள், கிருமி நாசினிகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.760/2020/எச்1

தென்காசி
நகராட்சி

14.09.2020 அன்று நடைபெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண். | மன்றப்பொருள் எண். | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | | | |
| 1 | 1 | 857 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 858 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 859 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 860 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 861 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 862 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 863 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 864 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 865 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 866 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 867 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 868 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 869 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்) க.செ. ஹசீனா
தனி அதிகாரி
தென்காசி நகர்மன்றம்

உண்மை நகல் உத்திரவின் படி

மேலாளர்
தென்காசி நகராட்சி

## 29.09.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள் 870–29/09/2020**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) அரசாணை எண். 298 நாள் 02.09.2020ல் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான வணிக வளாகங்கள், ஓராண்டு குத்தகைகளான சைக்கிள், மற்றும் டாக்ஸி ஸ்டாண்ட், வாரச்சந்தை, மற்றும் தினசரி சந்தை போன்ற இனங்களுக்கு 2020–21ம் ஆண்டுக்குரிய குத்தகை இனங்களில் வசூலிக்கப்பட வேண்டிய குத்தகை தொகையில் 01.04.2020 முல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது, மேற்கண்ட அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அகு. மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள் 871–29/09/2020</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 15.08.2020 சுதந்திர தினவிழா அன்று தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேசிய கொடி ஏற்றி வைத்து சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு மரியாதை செலுத்துதல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு நற்சான்றுகள் வழங்குதல் மற்றும் பள்ளி / கல்லூரி மாணவ, மாணவியர்களது கலை நிகழ்ச்சி மற்றும் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பள்ளயின் மைதானத்தை தூய்மைப்படுத்தி, புதர்களை அகற்றி சமப்படுத்தி சுற்றிலும் சுண்ணாம்பு பொடி தூவி தயார் நிலையில் வைத்தல், குடிதண்ணீர் வழங்குதல், தேவையான எண்ணிக்கையில் தற்காலிக கழிப்பிடங்களை நல்லநிலையில் ஏற்படுத்துதல் மற்றும் தேவையான இடத்தில் குப்பைத் தொட்டிகள் வைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்திரவிடப்பட்டுள்ள குடியரசு தினவிழா பணிகளை உடனடியாக மேற்கொள்ள உத்தேச தொகை ரூ0.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி குடியரசு தினவிழா பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: /2020/இ1

**<u>மன்றப்பொருள் 872–29/09/2020</u>**

தென்காசி நகராட்சிக்கு 2020-2021 ஆண்டிற்கு தேவையான படிவங்கள், எழுது பொருட்கள், ரசீதுகள், மற்றும் கணினி உபகரணங்கள் போன்ற அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ9.75 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தேவையான எழுது பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு பண்டகசாலைகளில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் 873–29/09/2020**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கடை எண். **1**க்கு **17.09.2020** அன்று நடைபெற்ற பொது ஏலத்தில்/ஒப்பந்தபுள்ளியில் கோரியதில் மாத வாடகையாக ரூ. **3600**/க்கு திரு. சா.தனசிங் என்பவர் ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளார். மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியானது மேற்படி கடைக்கு அருகே உள்ள கடை எண். **2,3,4,5,6** ஆகிய ஐந்து கடைகளுக்கு மாத வாடகையாக உள்ள தொகை ரூ. **3500/–**ஐ விட கூடுதலாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளதால் தினசரி சந்தை கடை எண். **1**ஐ திரு. சா.தனசிங் என்பவருக்கு மாத வாடகையாகரூ**3600/–**க்கு ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அகு. மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்படிதினசரிசந்தைகடைஎண்..1க்கு14.11.2018,06.12.2018,27.12.18,11.01.2019, 30.01.19, 14.02.19, 05.03.19, 20.03.19, 11.06.19, 04.07.19, 14.11.19,19.12.19,22.01.20,04.03.20,09.04.20,13.05.20,10.06.20, 21.07.20 மற்றும் 19.08.20 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும், எவரும் ஏலம் கோரமுன்வரவில்லை. 17.09.2020 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு. சா.தனசிங் என்பவர் மாத வாடகையாக ரூ. 3600/க்கு கொடுத்த ஒப்பந்தபுள்ளியானது திரு.டி.மிரக்ளின் வெஸ்லி டேனி என்பவர் மாத வாடகையாக ரூ. 3500/–க்கு கொடுத்த ஒப்பந்தபுள்ளியினை விட கூடுதலாக மேற்படி ஒப்பந்தபுள்ளி உள்ளதாலும் அருகிலுள்ள கடைகளின் மாத வாடகையினை விட கூடுதலாக உள்ளதாலும் திரு. சா.தனசிங் என்பவருக்கு தினசரி சந்தை கடை எண். 1ஐ மன்ற முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2620/18/அ2

**மன்றப்பொருள் 874–29/09/2020**

தென்காசி நகராட்சி புரட்சித்தலைவி அம்மா விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டு பட்டியல் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12635/2020 நாள். 28.08.2020ன்படி சமுதாய அமைப்பாளர்களின் கீழ் செயல்பட்டு வரும்சுய உதவிக்குழுக்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் அனிமேட்டர் ஆகியோரைக் கொண்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள களப்பணியாளர்களுக்கு ஊதியமாக சுமார் 10 பணியாளர்கள் நியமித்து வழங்கவும் கணக்கெடுப்பு படிவங்கள் 7193 எண்ணம் பிரிண்ட் எடுப்பதற்கும் மேலும், இப்பணிகள் தொடர்பான விபரங்களை அன்றாடம் கனிணியில் பதிவேற்றம் செய்யவும் மேற்கண்ட படிவங்களை இணைய தள வழியாக பதிவேற்றம் செய்ய ஏதுவாக டேட்டா என்டரி ஆப்பரேட்டர் ஒருவரை நியமித்து ஊதியம் வழங்கவும் ஆகும் மொத்த செலவுத் தொகை ரூ. 160000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அகு. 1) மேற்கண்ட பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத்திட்டம் என்பதால் அவசியம் கருதி உத்தேசத் செலவுத்தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12635/2020/UPA3–1 நாள் 28.08.2020ஐ மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் 875–29/09/2020**

தென்காசி நகராட்சியில் ஆணையர் பதவியானது 15.11.2019 முதல் காலியாக இருந்ததனை தொடர்ந்து நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 684/2018/சி1 நாள்.25.11.2019 படி இந்நகராட்சி பொறியாளர் திருமதி. கே.எஸ்.ஹசீனா அவர்களுக்கு கூடுதல் முழுபொறுப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. மேற்படி நாளில் இருந்து கூடுதல் பொறுப்பு வகித்து வரும் அன்னாருக்கு விதிமுறைகளின்படி கூடுதல் ஊதியம் வழங்க கோரியுள்ளதனை தொடர்ந்து மே–2020 முதல் ஆகஸ்ட்–2020 வரையிலான 4–மாத காலத்திற்கு கூடுதல் ஊதியம் கணக்கிட்டு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அகு. மன்றம் அனுமதிக்கலாம்.
மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

தென்காசி

நகராட்சி

29.09.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண். | மன்றப்பொருள் எண். | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | | | |
| 1 | 1 | 870 | அ.கு. பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 871 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 872 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 873 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 874 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 875 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |

(ஓம்) க.செ. ஹசீனா

தனி அதிகாரி

தென்காசி நகர்மன்றம்

உண்மை நகல் உத்திரவின் படி

மேலாளர்

தென்காசி நகராட்சி